DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 15/2024**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கருப்பையா | Caste: | |
| Father's Name: | சிவலிங்கம் | Calling: | விவசாயம் |
| Village: | நெடுங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 65 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.11.2025

(எதிரி ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் கமுதி தாலுகாவில் உள்ள நெடுங்குளத்தில் விவசாய வேலை செய்து வருகிறேன். எங்க ஊரை சேர்ந்த அழகு மகன் சந்திரகுமாரை தெரியும். கடந்த 2024ம் வருடம் பங்குனி மாதம் ஒரு நாள் காலை 8.00 மணியளவில் என் வயலுக்கு சென்றபோது எங்கள் ஊர் கலைக்குளத்து கண்மாய் கரைக்கு போலிசார் வந்து இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக கையெழுத்து போடும்படி கேட்டதால் நானும் சாட்சி சந்திரகுமாரும் கையேழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என் கையெழுத்துதான். முதல் கையெழுத்து சந்திரகுமாருடையது. பார்வை மகசர் **அ.சா.ஆ.2** . இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

புஷ்பராஜ் எனக்கு என்ன உறவு என்றால் கொழுந்தியா மகன். நான் 4,5 கையெழுத்துகள் போட்டிருப்பேனா என்றால் இல்லை ஒரு கையெழுத்துதான் போட்டேன். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் உள்ள விவரங்களை எந்த போலிசார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல் நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதற்காக எழுதப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது என்றால் முதல் நாள் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டது சம்பந்தமாக எழுதினார்கள். என்னை காவல்நிலையத்திற்கு வரசொல்லியிருந்தார்களா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. புஷ்பராஜ் எனக்கு கொழுந்தியா மகன் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது சம்பவம் நடந்த இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக மருத்துவமனைக்கு சென்றதாகவும் அங்கு வைத்து காயம்பட்ட என் அக்கா இருளாயி யார் என மருத்துவர் கேட்டார். நான் என் அக்கா என்று சொன்னேன். அப்போது மருத்துவர் ஒரு கையெழுத்து கேட்டார். போட்டு கொடுத்தேன்.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 15/2024**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பால்பாண்டி | Caste: | |
| Father's Name: | முனியாண்டி | Calling: | விவசாயம் |
| Village: | கே. நெடுங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.11.2025

(எதிரி ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் கமுதி தாலுகாவில் உள்ள நெடுங்குளத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எங்க ஊரை சேர்ந்த செல்லம் மகன் முனியசாமியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் பக்கத்து ஊர்க்காரர். அ.சா.1 புஷ்பராஜை தெரியும். கடந்த 2024 ம் வருடம் ஒரு நாள் நானும் சாட்சி முனியசாமியும் கலைக்குளத்து கண்மாய்குள்ளே காட்டு கருவேல் மரங்களை வெட்டி கொண்டிருந்தோம். மதியம் மணி 1.30 மணியளவில் ரோட்டில் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த கண்மாய்க்கு அருகே எல்லை பிடாரி அம்மன் கோவில் உள்ளது. கோவிலுக்கு அருகே உள்ள ரோட்டில் போலிசார் ஆஜர் எதிரியுடன் நின்றுகொண்டிருந்தார்கள். நானும் முனியசாமியும் அங்கு சென்றபோது போலிசார் எதிரியை விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது எதிரியை விசாரித்தது சம்பந்தமாக என்னிடமும் முனியசாமியிடமும் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள

முதல் கையெழுத்து என்னுடையது. 2வது கையெழுத்து முனியசாமியுடையது. ஒரு கையெழுத்துதான் போட சொன்னார்கள். போட்டேன். அத்துடன் எங்களை போக சொல்லிவிட்டார்கள். நாங்கள் சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துகள் முறையே **அ.சா.ஆ.3,4**. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

நாங்கள் விறகு வெட்டிக்கொண்டிருந்த இடம் கண்மாய் உள்புறம் என்றால் சரிதான். சத்தம் கேட்டு ரோட்டிற்கு வந்தபோதுதான் போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள், கையெழுத்து கேட்டதால் போட்டுக்கொடுத்தோம் என்றால் சரிதான். கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது, யார் எழுதியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இருளாயி எனக்கு மதனியார். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரிதான். இருளாயி எனக்கு மதனியார் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டுவிட்டு தற்சமயம் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)